

ஆவிக்குரிய கண்கள்

அப்போஸ்தலர் S. ஏசுதாசன்

Transcribed by GTG, NJC Bengaluru

ஆவிக்குரிய கண்கள்

செய்தி:

அப்போஸ்தலர் S- ஏசுதாசன்

புதிய எருசலேம் சபை

நாகர்கோவில்

Ph- 8903131260, 9489529462

www.newjerusalemnews.in

Special sermon as telecasted on Nambikkai TV
on 8 Apr 2021

Video sermon transcribed by
"Glory To God (GTG)"
NJC Bengaluru

இந்த வீடியோ செய்தியை njcngl Youtube channel - ல் காணலாம்.

ஆவிக்குரிய கண்கள்

அப்போஸ்தலர் S- ஏசுதாசன்

தேவனுடைய பரிசுத்தமுள்ள நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. அன்பான கர்த்தருடைய பிள்ளைகளே. தேவனுடைய வார்த்தைகளை உங்களுக்கு அறிவிக்க கர்த்தர் கொடுத்த தயவுக்கு நன்றி.

தேவனுடைய வார்த்தையை அப்படியே தேவனுடைய வார்த்தையாக விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்போது , அது அவர்களுக்குள் வல்லமையாய் கிரியை செய்கிறது என்பது வேதம் காண்பிக்கின்ற அருமையான சத்தியம்.

இவ்வுலகிலே வாழ்கின்ற நமக்கு கண்கள் மிகவும் அத்தியாவசியம். வேதமும் கண் சரீரத்தினுடைய விளக்காக இருக்கிறது என்று சொல்லுகிறது.

மனிதன் இரண்டு வகையாக இருக்கின்றான். ஒன்று உள்ளான மனிதன், இவன் தெய்வீக இயல்புடைய மனிதன். இன்னொரு வகை புறம்பான மனிதன். புறம்பான மனிதன் பாவ இயல்புடைய மனிதன். புறம்பான மனிதனுடைய கண்கள் எப்பொழுதுமே தீமையை பார்க்கிறது. தீமையானவைகளை தேடி உலகத்துக்கு உரியவைகளை அது கண்ணோக்குகின்றது.

ஆனால், உள்ளான மனிதனுடைய பார்வை தெய்வீக இயல்புடைய பார்வை. அது தேவனுக்குரியவைகளை சிந்திக்கிறதும், பார்க்கிறதும் தேடுகிறதுமாக இருக்கிறது . ஆதி மனிதனாகிய ஆதாமையும் ஏவாளையும் ஆண்டவர் தம்முடைய சாயலில் படைத்தார்.அவர்கள் தேவசாயலாக படைக்கப்பட்டார்கள்.

அருமையானவர்களே, நம் ஆதி பெற்றோருக்கு பாவக் கண்கள் இல்லை. அவர்களுடைய கண்கள் தூய்மையானவைகளை, நல்லவைகளை பரிசுத்தமானவைகளை பார்க்கின்றதாகவே இருந்தது. ஆ ! எவ்வளவு மகிமையானதொரு ஆசீர்வாதம். மகிமை, மேன்மை, ஆச்சரியமான ஒரு வாழ்க்கை. ஆனால், இந்த மகிழ்ச்சியான வாழ்வு நீடிக்கவில்லை. சாத்தான் அதை கெடுக்கத் திட்டமிட்டான். வஞ்சகமாய் ஏவாளிடம், அவள் தனிமையில்

இருந்தபோது சர்ப்பத்தின் மூலம் பேசினான். தேவனின் கட்டளையை மீறும் படி ஆசை வார்த்தைகளை பேசி,மீறுதல் செய்யத்தூண்டினான்.பின் வரும் வசனங்கள் அதை விவரிக்கின்றன.

நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது (ஆதியாகமம் 3:5).

அப்பொழுது ஸ்திரீயானவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத்தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான் (ஆதியாகமம் 3:6).

அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள் (ஆதியாகமம் 3:7).

சாத்தான் சொன்னான், "நீங்கள் தோட்டத்தின் மத்தியில் இருக்கிற விருட்சத்தின் கனியை புசித்தீர்கள் என்றால் உங்களுடைய கண்கள் திறக்கப்பட்டுவிடும்.நீங்கள் நன்மையையும் தீமையையும் அறியத்தக்கதான அறிவுடையவர்களாக மாறிவிடுவீர்கள் என்று தந்திரமாய் பேச ஆரம்பித்தான்.

நன்மையை மட்டும் அறிந்த மனிதன் இப்போழுது இந்த கனியை சாப்பிட்ட உடன் தீமையையும் சேர்த்து அறியக்கூடிய , பார்க்கக் கூடிய அறிவு ஏற்பட்டுவிடும், இது மிகவும் அவசியம் என்பது போல சாத்தான் சொன்னான். ஏவாளும் அதை அப்படியே நம்பி தேவனுடைய வார்த்தையை மீறி சாத்தானுக்கு செவிகொடுத்தபடியினால், அந்த பரிதாபமான சம்பவம் நிகழ்ந்தது (**ஆதியாகமம் 3:5 - 7).**

அவர்களின் கண்கள், அதாவது அவர்களுடைய பாவக் கண்கள் திறக்கப்பட்டது. ஆவிக்குரிய கண்கள் மங்கிப் போனது. மனிதன் தேவனுடைய வார்த்தையை, கட்டளையை மீறுகின்றபோது அவனிலே பாவப் போராட்டம் , பாவ எண்ணங்கள் , உலக நேசங்கள், தீமையான ஆலோசனைகள் பிறக்க ஆரம்பிக்கின்றன.

அதுவரைக்கும் நிர்வாணமாக இருந்தும் அதை அறியாது , கபடற்று இருந்தவர்கள் தேவனுடைய கட்டளையை மீறிய உடனே பாவக் கண்கள் திறக்கப்பட்டவுடன் வெட்கத்தை, கூச்சத்தை உணர்ந்தனர். தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து தங்கள் நிர்வாணத்தை மறைக்க, தங்களுடைய அவலட்சணத்தை மறைக்க, அத்திமரத்தின் இலைகளை பறித்து அதை தைத்து அரைக்கச்சையாக கட்டிக்கொண்டார்கள்.

அது அவர்களுக்கு பாதுகாப்பாக இருக்காதென்றும் இது அவர்கள் பாவத்தை போக்க , பாவத்தை மறைக்க, பாவ எண்ணங்களை நீக்க , அவர்களுக்கு உதவி செய்யாது என்பதையும் அறிய ஆரம்பித்தனர். மனிதன் தன்னில் தானே வல்லமையை உள்ளவன் இல்லையே. அத்தி இலையை பறித்து அதை தைத்து அரைக்கச்சையாக கட்டிக்கொண்டார்கள்.

அத்தி இலை வெய்யில் அடித்தால் சுருங்கி பழையபடி நிர்வாணம் காணப்படும். மழை பெய்தால் அழுகிபோய் நாற்றமெடுக்க ஆரம்பித்து விடும். இது அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கிறது இல்லையே.

தேவ வார்த்தையை, தேவனுடைய கட்டளையை, தேவன் சொன்ன காரியத்தை எந்த மனிதன் மீறுகின்றானோ அவனில் பாவம் எழும்பி போராட ஆரம்பிக்கிறது. அதுவரை தன்னில் எந்த தீமையையும் அறியாத அவனுக்குள் இப்போது தான் ஒரு பாவியென்ற அறிவு வர ஆரம்பித்துவிட்டது. மிக பரிதாபமான நிலையல்லவா இது?

இதை அறிந்த பிதாவாகிய தேவன் என்ன செய்தார் என்றால், தன்னுடைய ஒரேபேரான குமாரனை பூமிக்கு அனுப்பி, குமாரன் மூலமாக மனிதனுடைய நிர்வாணத்தை மறைக்க , பாவத்தை போக்க, உள்ளான மனிதனுடைய ஆவிக்குரிய பார்வையை கொடுக்க ஆண்டவர் சித்தம் கொண்டார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கல்வாரியிலே மரித்ததும், ஜீவனை கொடுத்ததும், இத்தனை பாடுகளை பட்டதும் எதற்காக என்றால்? மனிதன் மறுபடியும் ஆவிக்குரிய பார்வை உடையவனாக ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டவனாக மாறவேண்டும் என்பது தான். இது தான் நம் அன்புள்ள தேவனுடைய திருவுளசித்தம் .

ஆவிக்குரிய கண் திறக்காததினால்தான் இன்று மனிதர்கள் ஒருவரை ஒருவர் பகைக்க, கிறிஸ்தவர்களை பகைக்க, கிறிஸ்துவ மார்க்கத்தை பகைக்க, காரணம் என்னவென்றே தெரியாமல் எதிர்ப்பு தெரிவிக்க முற்படுகிறார்கள். நல்லவர்களை தாக்குகின்றார்கள், துன்பப்படுத்துகிறார்கள். ஏனெனில், இவர்களுடைய ஆவிக்குரிய கண் குருடாகி பாவ கண்கள் திறந்து விட்டது. ஆவிக்குரிய கண்கள் குருடாகி பாவக்கண்கள் திறக்கப்பட்டபடியால் இப்படி சம்பவிக்கிறது.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த பூமியில் வந்து மனிதனுடைய ஆன்மீக கண்ணை திறக்க, அவர்களுடைய நிர்வாணத்தை மறைக்க, அவனுக்கு இரட்சிப்பின் வஸ்திரம் கொடுக்க, ஆவிக்குரிய கண்களை திறக்க ஆண்டவர் சித்தம் கொண்டார்.

ஆண்டவர் கல்வாரியில் சொன்னார் அல்லவா?. பிதாவே இவர்களுக்கு மன்னியும் , தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாமல் செய்கின்றார்கள் என்று, அந்த கொடிய வேதனை வேளையிலும் மன்னிக்கும்படி ஜெபித்தாரே. ஆம்! மன்னிப்பதே அவருடைய சித்தம்.

கடவுள் என்றால் இவரல்லவா கடவுள்.நம்மை மன்னிக்க வந்த பெருமான் இயேசு? அடிக்கிறவர்களையும், தன்னை துன்பப்படுத்துகிறவர்களையும், மன்னித்து அவர்களுக்கு மறுபடியும் தெய்வீகத்தை அறிந்து கொள்ளும் கண்களை அவர்களுக்கு கொடுக்கும்படியாகவே அன்பு தெய்வம் விரும்புகிறார்.

யூதர்கள் அப்போஸ்தலனாகிய பவுலை பகைத்தார்கள், கொலை செய்யவும் முற்பட்டார்கள்.அவரை அழித்துவிட வேண்டும், யூத மார்க்கத்தில் இருந்தவன் மாறி இப்போது நம்முடைய மார்க்கத்துக்கு விரோதமாக செயல்படுகிறபடியால் , அவனை அழித்துவிட வேண்டும் என்று தீர்மானம் பண்ணி பெரிய சர்ச்சை உண்டாகி, அகிரிப்பா ராஜாவிடம் இந்த வழக்கு கொண்டு செல்லப்பட்டது.

விசாரணைக்காக அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக நிற்கும் போது பவுல் தன்னுடைய முந்தைய அனுபவத்தையும், இயேசுவை அறிந்துகொண்டபின் தற்போதைய தன்னுடைய புதிய விசுவாசத்தையும், யூத ஜனங்கள் அதை பற்றி

அறிந்திருந்தார்கள் என்பதையும். அவர்களைப் போலவே நானும் குருடனாக இருந்தேன், இப்போதோ என்னுடைய ஆவிக்குரிய கண்களை கர்த்தராகிய இயேசு திறந்துவிட்டார். இப்போது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தெய்வமென நன்கு உணர்ந்துகொண்டேன். தெய்வமாகிய இயேசு என்னை பிடித்தார். அவர் என்னை சந்தித்தார். அவர் என்னை பயங்கரமான ஒளியில் என்னை சந்தித்து எனக்கு சொன்னதாவது.

அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார் (அப்போஸ்தலர் 26:18).

ஆகையால், அகிரிப்பா ராஜாவே நான் அந்தப் பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை (அப்போஸ்தலர் 26:19).

இப்படி பவுல் அகிரிப்பா ராஜாவிடம் விளக்கமாய் சொல்லுகிறார். சிறுவயதிலே அவர்களை போல இந்த யூத மார்க்கத்திலே பக்திவைராக்கியம் உடையவனாக நான் இருந்தேன். இந்த தெய்வீக தரிசனம் எனக்கு உண்டாயிற்று . மனிதனுக்கு பாவமன்னிப்பாகிய இரட்சிப்பு கிடைக்க வேண்டும் என்றால் இயேசு கிறிஸ்துவை தெய்வமாய் விசுவாசித்து ஏற்றுக்கொள்ள வேண்டும் அப்போது தான் இரட்சிப்பு கிடைக்கும். பாவமன்னிப்பு கிடைக்கும் என்று விளக்குகிறார், வைராக்கியமாய் சாட்சி சொல்லுகிறார்.

அது மாத்திரம் அல்ல பரிசுத்தவான்களுக்கு , இப்படி இரட்சிக்கப்பட்டு கடவுளுக்கு பிரியமாய் வாழுகின்ற தேவமனிதர்களுக்கு, ஒரு சுதந்திரம் இருக்கிறது. அந்த சுதந்திரத்தை அவர்கள் காண வேண்டும் . இவர்கள் இருளுக்குள் இருக்கிறார்கள். சாத்தானுடைய அந்தகாரத்திற்குள் கட்டப்பட்டவர்களாக இருக்கிறார்கள் . தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாமல் இருக்கிறார்கள்.

தேவனை சார்ந்து இருப்பதால் என்ன பயன் என்பதை அறியாமல் இருக்கக் காரணம் அவர்கள் கண்கள் திறக்கப்படவில்லை. அவர்களின் உள்ளான

கண்கள் திறக்கப்படவேண்டும், ஆகவே உன்னை அவர்களுடைய கண்களை திறக்கும்படியாக அனுப்புகிறேன் என்று இறைவன் இயேசு சொன்னார் என்று பவுல் தெளிவுபட பேசுகிறார்.

கண் தெரியாதவனுக்கு வெளிச்சமோ, இருளோ வித்தியாசம் தெரியாது. அவனுக்கு எல்லாம் ஒன்றே. அப்படித் தான் ஆண்டவராகிய தேவனை ஆராதிக்கிற மக்களில் சிலர் கூட, கொடிய பாவத்தை செய்து கொண்டு அந்தகார இருளுக்குள்ளே அடைக்கப்பட்டு தாங்கள் என்ன செய்கிறோம், இதன் முடிவு என்ன? ஆண்டவரை ஆராதிக்கிறதினால், கிடைக்கிற பலன் என்ன? என்கிறதை அறிந்து கொள்ள முடியாமல் இருக்கிறார்கள்.

அநேக பக்தியுள்ளவர்கள் இப்படி தான் இருக்கிறார்கள். உங்களுக்கு ஒரு சம்பவத்தை நான் சொல்ல விரும்புகிறேன். ஊழிய காலத்திலே இந்த உபதேசம், இந்த கண்திறக்கப்படும் ஊழியம், இந்த பாவ அறிக்கை , பாவ மன்னிப்பின் உபதேசம் இவைகள் எந்த முறையிலே ஊழியத்திலே நடைமுறைக்கு வந்தது என்பதை , ஒரு சிறிய காரியத்தை சொல்லி விளக்க விரும்புகிறேன்.

நாங்கள் வெளிபடுத்தல் பெற்று ஒரு ஆவிக்குரிய சபையை சந்தித்து கொண்டுவந்தோம். அங்கே ஒரு கிறிஸ்தவ சாது ஐயா ஒருவர் இருந்தார். அவர்களுக்கு எங்களை மிகவும் பிடித்திருந்தது. நாங்கள் சொல்லும் செய்தி தேவசெய்தியே என அவர் ஏற்றுக்கொள்ளும்படியாகவும் இருந்தது. அவருக்கு உடன் ஊழியராக ஒருவர் இருந்தார். அவருக்கு பாவ அறிக்கை என்ற இந்த உபதேசம் விளங்கவில்லை, அவர் அதை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. அந்த சாது ஐயா அதை ஏற்றுக்கொண்டதை அறிந்து இவர் எரிச்சல்பட்டார். நாங்கள் போனால் எங்களுடன் பேசமாட்டார் , தூர நின்று பார்த்துக்கொண்டே இருப்பார்.

ஒரு நாள் சாது ஐயாவை சந்திக்கிறதற்காக நாங்கள் சபைக்கு சென்றோம். அப்போது அவர் அங்கு இல்லை வெளியே போய் விட்டார். போகும்போது சொல்லிவிட்டு போயிருக்கிறார் அவர்கள் வந்தார்கள் என்றால், என்னைப் பற்றி கர்த்தருடைய செய்தி , என்ன என்பதை கேட்டு எழுதி வைத்துக்கொள் என்று சொல்லிவிட்டு, அவர் போய் விட்டார். அப்போது நாங்கள் அங்கே போனோம்.

அப்போது சாது ஐயாவுக்கு ஏதாவது செய்தி இருக்கா? ஐயா எழுதி வைக்க சொன்னர்கள் என்று சொன்னார். இப்போது அவர்களுக்கு செய்தி இல்லை, உங்களுக்கு தான் செய்தி இருக்கிறது என்று சொன்னோம்.

அருமையானவர்களே, கண்திறக்கப்பட்டவனுக்குத்தானே ஆடையில் அழுக்கு இருந்தால் தெரியும், மற்றவர்களுக்கும் அதை காண்பித்து சரி செய்யும்படி சொல்லிக்கொடுக்க முடியும் இல்லையா?. ஆகவே, உங்களுக்குத்தான் ஒரு செய்தி இருக்கிறது என்று சொன்னோம். என்ன செய்தி?, என்று ஆவலுடன் கேட்டார். உங்களுக்குள் கடந்துபோன நாட்களில் நடந்திருந்த ஒரு பாவம் உங்களுக்குள் மறைந்து இருக்கின்றது. அந்த பாவத்தின் விளைவாக, உங்களுடைய ஆவிக்குரிய அனுபவங்களிலே வளர்ச்சி இல்லாமலும் மேன்மை அடையமுடியாமலும் இருக்கிறது. ஆவிக்குரிய வரங்களை, ஆசீர்வாதங்களை, ஆவியின் வல்லமைகளை பெற வேண்டும் என்று விரும்புகிறீர்கள் ஆனால் , உங்களால் முடியவில்லை . காரணம் உங்களுக்குள் அந்த பாவம் மறைந்து இருக்கிறது. அப்போது அவர் , அப்போதே நான் இயேசுவிடம் அறிக்கை செய்துவிட்டேனே என்று சொன்னார்.

இயேசு கிறிஸ்துவிடத்திலே அறிக்கை செய்யும் முறை எப்படி? இயேசு கிறிஸ்து விடம் தான் அறிக்கை செய்ய வேண்டும் அது சரியே. அந்த சரியான முறையை எப்படி கடைபிடிக்க வேண்டும் என்பதைத்தான் நாங்கள் உங்களுக்கு சொல்லுகிறோம். அப்போது அவர் சொன்னார் . நீங்கள் என்னுடைய பாவத்தை அறிக்கை செய்யும் முறையை சொல்லி தந்து விட்டீர்களானால், நான் உடனே இந்த உபதேசத்தை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறேன். எனக்குத் தேவை ஆவிக்குரிய ஜீவியம், வளர்ச்சி, மேன்மையான பரிசுத்தவாழ்க்கை இவைகளே வேண்டுமென்று அவர் எங்களிடம் சொன்னார்.

அப்படியே அவரை காட்டுக்கு அழைத்து கொண்டு போனோம். அங்கே அவருக்காக ஜெபம்பண்ணினோம். அவர் செய்த பாவத்தை கர்த்தர் எங்களுக்கு குறிப்பிட்டு சொன்னார். அதை அப்படியே நாங்கள் அவரிடம் சொன்னோம். அதை கேட்டவுடன் அப்படியே அவர் மிகவும் ஆச்சரியப்பட்டார் கீழ்படிந்தார். இது எனக்கே மறந்து போன ஒரு காரியம் ஆயிற்றே. ஆனால் இது ஒரு பெரிய பாவம் தான். இந்த பாவத்தினால் எனக்கு ஆவிக்குரிய ஜீவியம் நஷ்டப்படுகிறது என்பதை நான் அறிய முடியவில்லை. அறிய விரும்பினேன், சொல்லித்தர ஆள் இல்லை என்று சொன்னார்.

கண்திறக்கப்பட்டவன் தான் சொல்லிக்கொடுக்க முடியும். இப்படி எத்தனையோ பேரை விடுதலையாக்கி இருக்கிறோம். அருமையான தேவனுடைய பிள்ளைகளே, அவர் பாவ அறிக்கை செய்தார், திருச்சபைக்கு ஒரு உண்மையான உத்தமமான ஊழியக்காரராக அவர் பணி செய்து, பூரண வயதாகி பரலோகத்துக்கு போயி ருக்கிறார்.

அவர் பரலோகத்துக்கு போகிற அன்று கூட காலையில் திருச்சபையிலே, வழக்கமாய் ஏறெடுக்கப்படுகிற அதிகாலை ஐந்து மணி ஜெபத்தையும் ஜெபித்துவிட்டு சற்று இளைப்பாற படுக்கைக்கு சென்றவர்,அப்படியே பரலோகத்திற்கு போய் விட்டார். என்ன ஒரு பாக்கியம் பெற்ற தேவ மனிதர் அவர். அவருடைய ஆவிக்குரிய உள்ளான கண்திறக்கப்பட்டு, அவர் விரும்பிய பரிசுத்தவாழ்வு, ஆவிக்குரிய ஜீவியம், அதன் மேன்மையை அவர் வாஞ்சித்தபடியே அவருக்கு தேவன் தந்தார்.

கண்திறக்கப்பட்டவன் தான் இந்த கண்களை திறந்து கொடுக்கும் மகிமையான ஊழியத்தை செய்ய வேண்டும். அவர்களுக்குத்தான் மக்களை இருளை விட்டு சாத்தானுடைய அதிகாரத்தை விட்டு தேவனிடத்திற்கு திருப்பமுடியும். அது மட்டுமல்ல, இரட்சிக்கப்பட்டவர்களுக்கு பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கு ஒரு பெரிய சுதந்திரம் இருக்கிறது என்கிறதை அவர்கள் கேட்கிறதினால்மட்டும், அல்ல பார்க்கவும் வேண்டும், பார்க்க வைக்க வேண்டும் என்று இறைவனுடைய வார்த்தை சொல்லுகிறது.

ஆவிக்குரிய கண்களால் பார்த்தால் தானே மனிதனுக்கு அது தெரியும். இல்லாவிட்டால் தெரியாது. அல்லவா? நாம் விளக்கி சொன்னாலும், என்னவோ சொல்லிகிறார்கள் அவர்கள் மதத்தைப் பற்றி, அவர்கள் சபையை பற்றி, அவர்களுடைய கூட்டத்தை பற்றி ஏதோ புதுமையானதை சொல்கிறார்கள் என்றுதான் எண்ணுவார்கள்.

கண் திறக்கப்படும் போது தான் அவர்களுக்கு தேவனுடைய பிள்ளைகளுக்கு என்னென்ன பாதுகாப்பு. என்னென்ன மேன்மை உண்டு, அவர்களுடைய எதிர்காலம் என்ன?. அவர்கள் எங்கே போவார்கள்?, என்பதை பற்றிய அறிவு

அப்போது தான் கிடைக்கும்.

பிறவியிலேயே ஆதாமின் சந்ததிகளாக பிறந்த எல்லாருமே பாவிகள் தான். ஆதாம் என்று ஆன்மீக குருடராக ஆனாரோ ?, ஒளியை விட்டு இருளிடத்திற்கு போனாரோ ? அது முதற் கொண்டு பிறக்கிற சந்ததியெல்லாம் ஆன்மீக குருடர்களாகவே பிறந்திருக்கிறார்கள்.

இவைகளைச் சொல்லி, அவர் தரையிலே துப்பி, உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின்மேல் பூசி (யோவான் 9:6).

நீ போய், சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம். அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பிவந்தான் (யோவான் 9:7).

பிறவிக்குருடனான அவன் சீலோவாமின் குளத்திலே கழுவின படியினாலே அவன் பார்வை அடைந்தான். இயேசு அவனை சீலோவாம் குளத்திலே போய் கழுவு என்று கட்டளை கொடுத்து அனுப்பினார். சீலோவாம் என்பதின் அர்த்தம் "அனுப்பப்பட்டவன்" என்பதே.

ஆகவே, அனுப்பப்பட்டவனிடத்திலே போய் ஆலோசனை கேளுங்கள். அனுப்பப்பட்டவனிடம் போய் ஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அனுப்பப்பட்டவனிடத்திலே போய் பாவ அறிக்கை செய்யுங்கள். கண்டிப்பாக தேவன் அருளும் விடுதலை கிடைக்கும். உங்களுடைய கண்கள் திறக்கும். பக்கத்திலே இருக்கற குளத்திலே கழுவிவிட்டால் என்ன ? தண்ணீர் தானே வேண்டும்.?.ஏன் சீலோவாம் குளத்திற்கு தான் போகவேண்டுமா? என்று அநேகர் கேள்வி கேட்கலாம். ஆம், அனுப்பப்பட்டவனிடம் தான் போக வேண்டும்.

சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தம். ஆகவே அனுப்பப்பட்ட மனிதனிடத்தில் போய் கழுவிக்கொள்ள வேண்டும். நன்றாக கவனியுங்கள் அருமையானவர்களே. இது உங்களுக்கு புதிதாக தெரியலாம். இது ஏதோ கடினமாய் , கஷ்டமாய் தெரியலாம். இப்படி தான் செய்ய வேண்டுமா? இப்படி செய்யாத மற்றவர்கள் இல்லையா ? என்று கேட்கலாம்.

அனுப்பப்பட்ட மனிதர்கள் உண்டு. அவர்களிடம் போய் கழுவிக் கொள்ள வேண்டும். ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். தேவனுடைய வார்த்தைகளை

கேட்க வேண்டும். அப்படி செய்யும் போது, அவர்களுடைய மனக் கண்கள், ஆன்மீக கண்கள் திறக்கப்படும் என்பதே தேவன் நமக்கு காண்பிக்கும் தெளிவான பாதை.

ஆம், பரிசுத்த பவுலின் ஊழியமும் அது தான். அவருடைய கவலையும் இது தான். தேவனுடைய ஜனங்களாகிய சபை மக்களுக்கு ஆன்மீக, கண்கள் திறக்க வேண்டும், அவர்கள் தேவனுடைய மகத்துவத்தை காணவேண்டும் என்பதே அவருடைய ஆசையாக இருந்தது.

ஆகவே அவர் எபேசு சபைக்கு நிருபம் எழுதும் போது, உங்களுடைய கண்கள் திறக்கப்படும் படியாக தேவனிடத்திலே ஜெபம் பண்ண நாடுகிறேன் என்று எழுதினார்.

தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன் (எபேசியர் 1:19).

உங்களுக்கு பிரகாசமான கண்களை, அதாவது உள்ளான பிரகாசமான மனக் கண்களை கொடுக்கும்படியாக நான் வேண்டிக் கொள்கிறேன். எவ்வளவு தான் பிரசங்கம் பண்ணிலும், எவ்வளவு தான் ஆலோசனை கொடுத்தாலும் உள்ளான மனிதனுடைய மனக்கண் திறக்கப்படாத வரைக்கும் போராட்டம், போராட்டம், போராட்டம் தான். ஆராதித்தாலும் போராட்டத்தில் இருந்து விடுதலை இல்லை. பாவத்தில் இருந்தும் விடுதலை இல்லை. வெளிப்படையாக செய்யாவிட்டாலும், உள்ளான மனிதன் பாவம் செய்து கொண்டுத்தான் இருக்கிறான். அநேகருடைய வாழ்க்கையில் இதுதான் பெரிய துக்கத்தை கொடுக்கிறது. எவ்வளவு பிரயாசப்பட்டும் நமக்கு இன்னும் விடுதலை இல்லையே, எதை பார்த்தாலும் தீமையாகவே தோன்றுகின்றது. எதை பார்த்தாலும் போராடுகின்றதே என்று கவலைப்படுகிறவர்கள் எத்தனை பேர்.

கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது என்ன?. மனக்கண் திறக்கப்பட வேண்டும். நம்முடைய இந்த மாமிச கண்கள் திறக்கப்பட்டிருக்கலாம்,

ஆனால், நம்முடைய ஆன்மீக கண்கள் திறக்கப்பட்டு பிரகாசமுள்ளதாக இருக்கிறதா? , தேவதரிசனங்களை காணுகிறோமா?, தேவமகத்துவங்கள் வெளிப்படுகிறதா?

நம்முடைய வாழ்க்கையில் இந்த அனுபவங்கள் உண்டாகவேண்டும், கண் திறக்கப்பட்டவர்களுக்கே இவ்வனுபவங்கள் உண்டாகும்.

பக்தனாகிய தாவீது ராஜா ஒரு தீர்க்கதரிசி. அவருடைய கையில் இருக்கிற வேதத்தை திறக்கும் போதெல்லாம் ,ஆண்டவரே! உம்முடைய வேதத்தின் மகத்துவத்தை பார்க்கும்படி என் கண்களை திறந்தருளும் என்று ஜெபித்தாராம். எந்த கண்ணை அவர் சொன்னார். அவர் நல்ல பார்வை உடையவராகத்தானே இருந்தார்?.

அதன் பொருள் இதுதான். அந்த மாமிச கண்ணினால் வேதத்தின் மகத்துவங்களை அறிய முடியாது. மாமிச கண்களால் வேதத்தில் இருக்கிற ரகசியங்களை காண முடியாது. உள்ளான மனிதனில் இருக்கிற கண்ணானது பிரகாசமுடையதாக இருக்குமானால், வேதத்தில் இருக்கிற வார்த்தையின் அர்த்தங்கள், உள்ளது உள்ளபடியே அது நமக்கு தென்படும். நம்முடைய கண்ணுக்கு, அது தெளிவாய்த் தெரியும். கண் திறக்கப்பட வேண்டும். கண்திறக்கப்படும் ஊழியம் வேண்டும் என்று இறைவன் விரும்புகின்றார்.

ஆன்மீக உள்ளான கண்திறக்கப்பட்டு தேவனை நம்புகிறதினால், தேவனை ஆராதிக்கிறதினால், பிரமாணங்களை கைக்கொள்ளுகிறதினால் உண்டாகும் பாதுகாப்பு எவ்வளவு பெரியது, என்பதை தேவ பிள்ளைகள் சரியாக அறிந்து கொள்ளமுடியும்.

எலிசா தேவனுடைய மனிதன். தேவனுடைய மனிதனான அவன், குகைக்குள் இருந்து கொண்டே அடுத்த நாட்டிலே என்ன நடக்கிறது என்று பார்க்கக்கூடிய பார்வையை பெற்றவன். சீரியா தேசத்து ராஜா அவன் தன்னுடைய பள்ளி அறையிலே சிந்திக்கிற காரியங்கள், ராணுவ திட்டங்கள் எல்லாம் வெளியே எப்படியோ கசிகிறது என்ற அவனுக்கு அச்சம் ஏற்பட்டது. இஸ்ரவேல் தேசத்தை கைப்பற்ற சீரியா ராஜா இன்ன இன்ன இடத்தில் பாளையம் இறங்க வேண்டும் என்று தன் சகாக்களுடன் ரகசியமாய் திட்டமிடுகிற விஷயம் இஸ்ரவேல் தேசத்தில் இருக்கின்ற ராஜாவுக்கு எப்படியோ தெரிகிறதே.

நமக்குள்ளே ஒற்றன் ஒருவன் இருக்கிறான். இங்கே நாம் பேசுகிறதை இஸ்ரவேல் ராஜாவுக்கு அவன் அறிவிக்கிறான். அவன் யார் என்று எனக்கு தெரிய வேண்டும் என்று கோபமாய் சீரியா ராஜா கேட்டான்.

அவர்களில் ஒருவன் எழும்பி சொன்னான், இல்லை ராஜாவே அந்த தேசத்திலே கண் திறக்கப்பட்ட தேவ மனிதன் ஒருவன் இருக்கிறான்.அவன் நம் நாட்டில் எந்த கடைகோடியிலே, எந்த மூலையில் என்ன நடந்தாலும் அந்த கண்களினாலே அதை பார்ப்பான், அவைகளை பார்த்து, ராஜாவுக்கு அறிவித்துவிடுவான் என்று பதில் சொன்னான்.

சீரியா ராஜா உடனே படைகளை ஆயத்தப்படுத்தி அவன் எங்கே இருக்கிறான்?. என்று கேட்க , அவன் ஒரு மலையில் இருக்கிறான் என்று சொல்லப்பட்டது. அப்படியெனில், மலையை சுற்றி முற்றுகையிட்டு அவனை பிடித்துக் கொண்டு வாருங்கள் என்று, தன்னுடைய பெரிய சேனைகளை அனுப்பினான். அப்படியே சேனைகள் வந்து மலையை சுற்றி பாளையம் இறங்கியது.

காலையிலே தீர்க்கதரிசி எலிசாவின் வேலைக்காரன் கேயாசி வேலைக்காக வெளியே செல்லும்போது இந்த பெரிய பாளையத்தை பார்த்து என்னவென்று விசாரித்து கேட்டான். எலிசாவை பிடித்துக்கொண்டு போவதற்காக, இந்த படைகள் வந்திருக்கிறது என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டபோது கேயாசி மிகவும் பயந்து அலறினான். நம்மை பிடித்துக் கொண்டு போகும்படியாக இவ்வளவு பெரிய படைகள் வந்திருக்கிறதே?, இப்போது நாம் என்ன செய்வோம் என்று கலங்கினான். எலிசா பார்த்துக்கொண்டே இருந்திருப்பார். அவருக்கு தெரியும் அல்லவா? அவருக்கு இருக்கும் பாதுகாப்பு எவ்வளவு பெரியது என்பதை இவன் பார்க்கவில்லை.

பெரிய வரம்பெற்ற மனிதனின் வேலைக்காரனாக கேயாசி இருந்தாலும் அவனுடைய கண் திறக்கப்படவில்லையே. அவனுடைய கண் திறக்கப்படாதவரைக்கும். தனக்கு தேவன் வைத்திருக்கிற, தன்னுடன் இருக்கிற தேவ மனிதனுக்கு தேவன் வைத்திருக்கிற பாதுகாப்பு எவ்வளவு பெரியது என்று அவனுக்கு தெரியாதே.

பல எண்ணங்கள் எண்ணி அவன் பயப்படுகிறான். அவனுக்கு கண் திறக்கப்பட்டிருந்ததென்றால் பயந்திருக்கமாட்டான், கண் திறக்கப்பட்டவன், கவலைப்படமாட்டான். ஏனெனில், அவன் கண்ணுக்கு கர்த்தர் எவ்வளவு பெரிய பாதுகாப்பை தம்முடைய பிள்ளைகளுக்கு வைத்ததிருக்கிறார். இரட்சிப்பை சுதந்தரிக்கிறவர்கள் நிமித்தம் பணிவிடை செய்யக்கூடிய ஆவிகள் பரலோகத்தில் இருக்கிறார்கள் என்பதை அவனால் அறிய முடியும்.

அதற்கு அவன்: பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றான் (2 இராஜாக்கள் 6:16).

அப்பொழுது எலிசா விண்ணப்பம் பண்ணி: கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான்; உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்; இதோ, எலிசாவைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான் (2 இராஜாக்கள் 6:17).

கேயாசிக்கு எல்லாம் வேடிக்கையாகத்தான் இருந்திருக்கும். ஏனெனில், இங்கே ஒன்றையும் அவனால் பார்க்க இயலவில்லையே. ஏன்?, அவனுக்கு ஆன்மீகக் கண் திறக்கப்படவில்லை, கண் தெரியாது. அவன் பாவக் கண்ணுடன் இருக்கிறான். இப்படி இல்லாததை எலிசா சொல்கிறாரே என்று கேயாசி எண்ணி இருக்கலாம்.

யார், யார் தேவனுடைய திருப்பணியை செய்கின்றார்களோ, இரட்சிப்பை சுதந்தந்தரிக்கின்றார்களோ, இரட்சிப்பை சுதந்தரிக்க கூடிய வார்த்தைகளை சொல்லுகிறார்களோ அவர்களுக்கு பணிவிடை செய்யும்படியாக ஆண்டவர் தூத கணங்களை வைத்திருக்கின்றார்.

உலகத்திலே இருக்கிற மனிதர்களின் எண்ணிக்கையை விட பரலோகத்து தூதர்கள் எண்ணிக்கை மிகவும் அதிகம் என்று சொல்லப்படுகிறது. ஆண்டவர் தன் பக்தர்களுக்கு அவ்வளவு பெரிய பாதுகாப்பை வைத்திருக்கின்றார்.

அருமையானவர்களே நீங்கள் பயப்படுகின்றீர்களா? கலங்குகிறீர்களா? ஆண்டவராகிய தேவன், தூதகணங்களை உங்களுக்காக வைத்திருக்கிறார். தைரியமாய் இருங்கள். விசுவாசியுங்கள்.

அங்கே வந்திருக்கிறது எல்லாம் மாமிச வீரர்களும், மாமிச பெலமுள்ள குதிரைகளும், வந்து மலையை சுற்றிலும் இருக்கிறது என்பது தீர்க்கதரிசி எலிசாவின் வேலைக்காரன் கேயாசி கண்ட விஷயம். தேவனுடைய மனிதனுக்கு வைத்திருக்கிற பாதுகாப்பு என்ன ? அது அக்கினி இரதமும் அக்கினி குதிரைகளும் தானே. அந்த அக்கினி ரதந்தானே எலியாவை மேலே எடுத்துக் கொண்டு போனது. அதே அக்கினி இரதம் எலிசாவுக்கும் பாதுகாப்பாக இப்போது நிற்கிறது. அதையோ கேயாசி காண முடியவில்லை.

தேவன் தம்முடைய பரிசுத்தவான்களை காக்க, பரிசுத்தவான்களை இடம் விட்டு இடம் கொண்டு போக, ஆண்டவராகிய தேவன், அக்கினி ரதங்களை, குதிரைகளை வைத்திருக்கிறார். இவைகள் யாருக்குதெரியும் என்றால், நிச்சயமாக கண்திறக்கப் பட்டவனுக்கு மட்டுமே.

கேயாசியினால் அதை விசுவாசிக்க முடியவில்லை. அப்போது எலிசா ஆண்டவரே! நீர் எனக்கு வைத்திருக்கின்ற பாதுகாப்பை காணும்படியாக இவன் கண்ணைத் திறந்துவிடும் என்று ஜெபம் பண்ணினார். அப்போது கர்த்தர் வேலைகாரன் கேயாசியின் கண்களை திறந்தார். அப்போது கேயாசி மலையை சுற்றி நிற்கிற அக்கினி மயமான குதிரைகளை, இரதங்களைக் கண்டான்.

கேயாசியின் கண்களை திறந்த தேவன் உங்கள் கண்களையும் திறப்பார்.

உங்கள் கண்கள் திறக்கப்படுவதற்கு கண்திறக்கப்பட்டவன் ஒருவன் விண்ணப்பம் செய்ய வேண்டும். அந்த கண்திறக்கப்பட்டவன் விண்ணப்பம் பண்ணும் போது, அந்த விண்ணப்பம் கேட்கப்படும். குருடருக்குக் குருடர் வழிகாட்டினால் இருவரும் குழியில் விழுவார்களே என்று வேதம் சொல்கிறது அல்லவா? அப்படிப்பட்ட ஊழியம் இது அல்ல.

இது கண்ணைத் திறக்கிற ஊழியம். கண் திறக்கப்பட்டவன் தான் பிறருடைய கண்ணையும் திறக்கமுடியும். அருமையான தேவனுடைய பிள்ளைகளே, அது தான் ஆண்டவராகிய தேவனுடைய வார்த்தை (உபா 29: 4).

இஸ்ரவேல் ஜனங்கள் அடிக்கடி, பின் மாறினார்களே காரணம் என்ன?

எவ்வளவோ அற்புதங்கள். எகிப்தில் இருக்கும் போதும் அற்புதங்கள், எகிப்தை விட்டு வெளியே வரும் போதும் , வழியிலும் பல விதமாக அற்புதங்கள்.

ஆனால், தங்கள் வாழ்க்கையில் சில கஷ்டங்கள் வந்தவுடன் மோசேக்கு விரோதமாக முறுமுறுக்கவும் எதிர்க்கவும், அவர்கள் பழையபடி தாங்கள் விட்டு வந்த எகிப்திற்கு திரும்புவதற்கு முற்பட்டார்கள், தங்கள் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படாததால் அவர்கள் அப்படி எண்ணினர்.

கர்த்தர் செய்த பெரிய சோதனைகளையும், பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் கண்ணாரக் கண்டீர்களே (உபாகமம் 29:3).

ஆகிலும் கர்த்தர் உங்களுக்கு உணரத்தக்க இருதயத்தையும், காணத்தக்க கண்களையும், கேட்கத்தக்க காதுகளையும் இந்நாள்வரைக்கும் கொடுக்கவில்லை (உபாகமம் 29:4).

கவனியுங்கள் தேவன் அந்த கண்களை தரவில்லை. அவர்கள் பார்த்தனர் ,அந்த பாவக் கண்ணால் பார்த்தனர். அற்புதத்தை பார்த்தவுடன் துள்ளி குதித்து சந்தோஷப்பட்டார்கள், பின்பு அதை மறந்து விட்டார்கள் .ஏன்?. அவர்களுக்கு உள்ளான பார்வை இல்லை. உள்ளான பார்வை உள்ளவர்கள் மகத்துவம் செய்கிற தேவன் எவ்வளவு பெரிய காரியங்களை செய்திருக்கிறார் என்று அவர்கள் சந்தோஷப்பட முடியும்.

மோசே கண்திறக்கப்பட்டவன் தான். மோசே இனிவரும் பலன் மேல் நோக்கமாய் இருந்து எகிப்தின் பொக்கிஷங்களை , அநித்தியமான சந்தோஷத்தை, அரண்மனையின் சந்தோஷத்தை விட கிறிஸ்துவுக்காக பாடுபடுகிற மக்களுடன் பாடுபடுவதை மேன்மையென எண்ணினார். அதையே மோசே தெரிந்துகொண்டார். அவர் கண் திறக்கப்பட்டவர் ஆகவே அவருடைய ஆவிக்குரிய கண்களால் அதை காணமுடிந்தது.

இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினால் பாவ மன்னிப்பும், பரிசுத்தவான்களுக்கு வைக்கப்பட்டிருக்கிற சுதந்திரமும் பெரியதாக இருக்கிறபடியினால் அவற்றை பெற்றுக்கொள்வீர்களாக. நம்முடைய ஆவிக்குரிய உள்ளான கண்கள் திறக்கப்படுவதாக. உன்னதமானவைகளை நாம் காணுவோமாக. கர்த்தர் நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

****

நீங்கள் வாசித்த இச்செய்தி அப்போஸ்தலர். S. ஏசுதாசன் அவர்கள் நம்பிக்கை TVல் பிரசங்கித்த சுவிசேஷ செய்திகளாகும்.

பிரதி வியாழன் காலை 7-30 மணி முதல் 8.00 மணிவரை நம்பிக்கை TV - ல் ஒளிபரப்பாகும் இந்நிகழ்ச்சியை தவறாது பாருங்கள்.

NJCNGL - என்ற youtube Channel - ல் ஞாயிறு பரிசுத்த ஆராதனை வீடியோ செய்திகளையும், நம்பிக்கை TVல் பிரசங்கித்த வீடியோ செய்திகளையும் காணலாம்.

நேரடி தொடர்புக்கு, ஜெப உதவிகளுக்கு குறிப்பிடப்பட்ட எண்களை தொடர்புகொள்ளுங்கள்.